உ

கடவுள்துணை.

குமரகுருபரக்கடவுள்மீது

ஷண்முகப்பதிகமும்
கீர்த்தனங்களும்

இஃது

மேலூர்த் தாலூகா நாவினிப்பட்டி

வாசம்

ஜோஸ்யம் மாந்தரீகம் சங்கீத சாகித்ய

வித்வான்

எஸ். வெங்கிடதாஸ் அவர்களால்

இயற்றப் பெற்று

ஷை நாவினிப்பட்டியிலிருக்கும்

ஆறுமுகஞ்செட்டியார் அவர்களின்

குமாரர்

கண்டிக்கடைவியாபாரம்

மகா-ள-ள-ஸ்ரீ

ஆரு. சுப.

சுப்பிரமணியன் செட்டியார்

அவர்கள் வேண்டுகோட்படி

திருமங்கலம் வித்வான்

பாரதசுந்தர புராணிகர் அவர்கள்

குமாரர்

எஸ். கிருஷ்ணசாமி பிள்ளையால்

தமது

திருமங்கலம்

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

OFFICE OF THE REGI...
5 AUG 191
MADRAS

Q 26:47
M15
171347.

உ

கடவுள் துணை.

ஷண்முகப் பதிகம்.

காப்பு

வேண்பா.

முன்னா ளதனில் முத்திவீ டேரா
தின்னாளி லுஞ்சென்ம மேற்ற—சின்னம்
விலக்கக் குகன்மேற் பாவிசைக்க
நலந்தா வத்திமுகா நாள்.

ஆசிரியம்.

மாதமீரைந்துவரை மாதாவொருச்சாணை
வயற்றிடம்பை யூரினிற்
வந்துமேகட்டுண்டுத் தொப்பிட்கொடிவழி
வருகுமாகார முண்டு

தீதானகூடதாற் சிற்சிலச்சிரமங்கட்
சேருவதையுஞ் செயித்து

சிக்கானமுக்கோண வாயலுந்தாண்டிச்
செகமதிலுதித்த பின்னுஞ்

சாதனையாகவே ரோதனஞ்செய்யவுந்
தாலாட்டித் தாய்வளர்த்துத்

தாரமென்னுமொரு பற்றுதற்சூட்டி
சமுசார சாகரத்தின்

மேதினிப்பொய்யான வாட்கையைக்காட்டி
வெகுநாட் பிறவிக்குமே

வித்தாக்கியேவைத்த வினையெனையினித்தொடா
மேற்பதமருள் ஷண்முகா. (௧)

தூலமொடுசூட்சுமக் காரணசரீரமாய்
துலங்குமனு சென்மமதனிற்

சோதியாகும்பிர்ம்ம மொன்றொழிமற்றெலாந்
துடராது மேல்வழிக்கு

வாலவயதாமளவில் வாழ்வதைப்பெரிதாக
மயங்குவோர் கோடிகோடி

மண்ணாகுமிவ்வுடலைச் சூதானமாக
வளர்ப்பவர் தனைமறைத்துக்

காலனுஞ்சிவனைக் கவர்ந்துமேபோனபின்
கட்டியே யுறவினரெலாங்

காகூவெனக்கத்தக் காண்பதுங்கானல்நீர்
கனபவுசுமே சொப்பனம்

வேலைக்கிடமான பொய்யானசம்பமே
வெகுநாட் பிறவிக்குமே

வித்தாக்கியேவைத்த வினையெனையினித்தொடா
மேற்பதமருள் ஷண்முகா. (௨)

முன்[illegible]ரதால்வந்த சென்மாவதுகன்ம
மு[illegible]த லதினாலேயே

முத்திவழிகாணாதக் குற்றப்பெருக்கதால்
மோட்சத் திரம்விட்டதும்

பின்றொடரிச்சம்மந்தம் வருமாறுயெண்ணாத
பிசகதை நினைக்கவேக்கம்

பெண்ணாசைபொன்னாசை மண்ணாசையிவையெலாம்
பிறட்டான செயலாவதே

சன்மார்க்கமதனையே யனுட்டிக்கவுஞ்செயற்
சாதிப்பதே நிச்சயஞ்

சாண்வயர்வளர்த்திடத் தொழில்புரிவதுங்கோடித்
தவததினி லிச்சைவல்லை

வின்றாலுமேயதைக் கேட்கவுங்கொள்ளாத
வெகுநாட் பிறவிக்குமே

வித்தாக்கியேவைத்த வினையெனையினித்தொடா
மேற்பதமருள் ஷண்முகா. (௩)

இருந்தநிலையாகவு மிருப்போமென்றாற்பசி
யேக்கமும் மிகத்தோணுது

யெத்தனையோவிதம் நூலைப்படித்தாலு
மெல்லாம் விருந்தாகுது

பொருந்தாதவேலைகள் செய்தாலுமேயதிற்
பொல்லாத வழிநோக்குது

பூமிப்பிரதட்சணஞ் செய்திடநினைப்பினும்
பொருள்மூட்டை யும்வேண்டுது

திருந்தாதபடிபஞ்ச பூதமும்வெவ்வேறு
செயலுக் கிடங்காட்டுது

செகமானமாய்கையுஞ் செறுக்காய்க்கிடக்குது
செம்மையி லொட்டாததாய்

வெறும்பிலுக்கானதோர் நட்புக்கலைத்திடும்
வெகுநாட்பிரவிக்குமே

வித்தாக்கியேவைத்த வினையெனையினித்தொடா
மேற்பதமருள் ஷண்முகா. (௪)

ஓவியர்கள்செய்கின்ற வுருவந்தனக்குமே
வுள்ளதோர் மகிமையதுவு

மூத்தையாகுமனுக் கெடமானதற்கு
வொன்றுமே நிலையுமில்லை

ஆவியானதுவெளி யாகியேபோனபி
னடுத்திடு முறவினரெலா
மனேகனுலகத்தி லிருப்பவர்போலெண்ணி
யலரியுமழுது வீழ்ந்தும்
பாவமாகியபறை பறையர்களடிக்கவும்
பச்சைப் பல்லாக்கிலேத்திப்
பரிதாபமாயிடங் கொடுபோய்கிடத்திப்
பற்றுதல் வெளிவேசமாம்
வேவானசுற்றமும் பொருளுமேநீர்க்குமிழி
வெகுநாட் பிறவிக்குமே
வித்தாக்கியேவைத்த வினையெனையினித்தொடா
மேற்பதமருள் ஷண்முகா. (ரு)

பொய்யாம்புழுக்குறுமி வாழ்வுபெரிதாகவே
பூமிகன பொன்றேடியும்
புசியாமலாத்துமத்து ரோகங்களுஞ்செய்து
புண்ணியங் கள்பலவுமே
செய்யாமலோபியாய் பாவமானதொளிற்
செருக்காக வேமுடித்து
சின்ந்துநல்லோர்களை யுதாசினம்பேசியுந்
தெய்வநிந் தனைபுரிந்தும்
வையகமீதிலுள மானதிகளாடாது
மண்ணில் நிதிபுதைத்து
வைத்துமேமறலியூ ரடைந்துநாளும்நாற்ற
மலவீடு குடியேறிடும்
மெய்யானதைத்தொடருஞ் சம்மந்தமும்முற்றும்
வெகுநாட் பிறவிக்குமே
வித்தாக்கியேவைத்த வினையெனையினித்தொடா
மேற்பதமருள் ஷண்முகா. (சு)

தங்கமானதுமொன்று பணிதியும்வெவ்வேறு
சகலமும் பிர்ம்மமயமே
சாதிக்கும்முத்தர்க்குத் தோன்றுமேயல்லாது
தாழ்வுளோ ரறியவொணுது

மங்கையர்களாசையு மெங்கும்பிரகாசமே
மறப்பதும் வெகுதூரமே
வாயினலேபுகலும் வார்த்தைகள் ஞானமே
மனமான துஞ்சிக்கலே
பொங்கிடுங்கோபமும் நானென்றபேச்சுமே
பொல்லாத யிடம்நோக்குமே
புத்திபலசெப்பினுங் கொள்ளாதபிரபஞ்ச
பொய்யான மாய்கைக்குமே
வெங்காடதிற்புகுந் தொல்லையில்மூழ்கிடும்
வெகுநாட் பிறவிக்குமே
வித்தாக்கியேவைத்த வினையெனையினித்தொடா
மேற்பதமருள் ஷண்முகா. (எ)

நன்றானதொளிகளில் நாடாதுமேதுட்ட
நடக்கையிற் றிறமிகுந்து
ஞானவுபவாசனை செய்வதற்கெண்ணது
நாரிகள் மையலுக்கு
ளென்றுமாளாகியும் பற்பலவியாதியா
லிருந்திடத் தேயிருந்து
யெமனேலவருநாளை மாற்றவகைதோணது
யேமாந்ததை யெண்ணியுங்
குன்றியேவெகுவாக தாஞ்செய்தகாரியக்
குறிகளைநினைந்து நொந்து
கோளானதோர்நரக வீட்டினிற்றப்பாது
குடியேறிடு மூத்தையை
வென்றிடும்பாதையைக் கண்டுமேயேறாத
வெகுநாட் பிறவிக்குமே
வித்தாக்கியேவைத்த வினையெனையினித்தொடா
மேற்பதமருள் ஷண்முகா. (அ)

இனிப்பிறவாததோர் முத்திநோக்கங்களை
யெண்ணது மேதினமுமே
யில்லறக்கடலாடி யெத்தனையோவித
மின்பங்களை யடைந்தும்

மனமானதொன்றிலும் பற்றுதலகலாத
மார்க்கத் திருக்கவில்லை

மக்களுஞ்சுற்றமும் வாழ்வதுமுடலுக்கு
வாராதுபின் றுணைக்கு

கனவானபுவிபந்த பாசத்திருக்கின்ற
காக்ஷியும் நாளுறவதாய்

காலங்கழித்திடு மாந்தர்க்குமேசென்மக்
கசடானது மௌபருமே

வினயகெர்வங்களு மாசைக்குடந்தையாம்
வெகுநாட் பிறவிக்குமே

வித்தாக்கியேவைத்த வினையெனையினித்தொடா
மேற்பதமருள் ஷண்முகா. (சு)

படைவீடுவாறிலும் பார்முள்ளமலையிலும்
பக்தர்க ளகமீதிலும்

பாங்காகவேநின்று பாக்கியம்பாலிக்கும்
பரிபூர்ண ஞானமயமே

தடையேதுமில்லாது வாசியாம்மயிலேறித்
தரணிவல மாய்ச்சுழன்று

தந்தைக்குமுன்னதாய் வந்ததோர்தங்கமே
சஞ்சீவியாந் துங்கமே

திடமானசூர்படை சேதித்தசிங்கமே
தெய்வகுஞ்சரி வள்ளியுஞ்

சேர்க்கையாமோக்கியமே நேக்கினேன்வாக்கியமே
செந்தமிட் பதிகமாமே

விடையமாவுமுனது மெய்ப்பதமடையாத
வெகுநாட் பிறவிக்குமே

வித்தாக்கியேவைத்த வினையெனையினித்தொடா
மேற்பதமருள் ஷண்முகா. (௰)

ஷண்முகப் பதிகம்

முற்றிற்று.

சிவமயம்.

குமரகுருபரன்றுணை.

கீர்த்தனங்கள்.

ராகம்—நாட்டைக் குரிஞ்சி—தாளம்—ரூபகம்.

பல்லவி.

அத்திமாமுகனேதேவா அருமறை துதிதிருமருகோனே
கருணையேமிகும் வரதநாதனே (அ)

அநுபல்லவி.

சித்திவிநாயகனே சின்மயானந்தனே
சிங்காரமானஜங்கராஜெய மங்களம்வளர்
துங்கனே கன (அ)

சரணம்.

மூலப்பொருளானோனே மூஷிகவாகனனே
சீலம்நாளும்பூத்த செல்வனே
ஆலமுண்டோன்றனக்கு யருமைக்குமாரனே
அன்னைசொற்றவமுத அற்புதசர்க்குணனே
மேலாமுன்பதம்வேண்டும் வெங்கிடதாசன்றனே
வித்தைபுத்தியுஞ் சித்திபெற்றிடும்
முத்தியுரவதைநத்து முறுதிநல் (அ)

ராகம்—நாட்டை—தாளம்—ஆதி

பல்லவி

அருள்வேலா ஷண்முகனே
யானைதன்பதி சேனைகாவலனாய்
ஞானமீதிலணி தீனமானமணி (அரு)

அனுபல்லவி

சரஹணபவகுகனே திருக்கருணைதா
ஜெயவிஜயந்தா நற்சுகங்கள் கா பதபதனைதா
சதாவுன்றிருவடியைத் துதித்தஅருணகிரித்
தனக்குமனமகிழ நினைத்தவரமளித்த (அரு)

சரணங்கள்

காவில்கன்னிகுற காரிகையினிடங்காதல்கள்பல
காவியம்நல்கிக்கருதிச்சுருதிப்படி வருநாரதருடன்
கழுகுமலைவளவிற்றளரா வாழவுகந்த (அரு)

பார்கடைக்கண்ணுற் பாலனென்றெனை
பாருலகெல்லாம்பாதுகாக்கவே பாடினேனிதுதருதி
வோடிவாமுருகா பக்ஷம்வைத்தெந்தனை
ரட்சித்தருள் சுரக்க(அரு)

ஆறுமுகமுமாறிரண்டு கையுமாக
மயில்மீதிலாரோகணமா யடியாரழைக்க
வரும்வடிவே வெங்கிடதாசனை
யன்றுதிக்கிரங்கி மெய்யாகவேவிளங்கும்(அரு)

ராகம்—கமாஸ்—தாளம்—ஆதி.

பல்லவி

வீடானதுந்தூரமா வெற்றிவேற்றுங்கும்க்ஷேமா (வீ)

அனுபல்லவி

பாடியும்நின்பதம் பாங்காய்போற்றியும்
நிதம் நாடியெனை வராதெவ்விதம்
ஞான பண்டிதம் (வீ)

சரணங்கள்.

அத்தியைக்காத்தோன்மருகா சத்துருசங்காரகுகா
சித்துக்குவித்தான யோகா வுத்தமவாகா (வீ)

குக்குடதுஜனேமிக்க யருள்நேசனே
பக்குவமறிந்தவாசனே பரமாத்மனே (வீ)

மங்காதவாழ்வைத்தாவி சங்கீதமென்றுங்கூவி
துங்கமிகுக்கும்புவி வெங்கிடகவி (வீ)

ராகம்—பியாகு—தாளம்—ஆதி.

பல்லவி

கந்தனேகாரு மெந்தனை (கந்)

அநுபய்லவி

செந்திருமாதுமேவாழுந் தென்பரங்கிரியையாளுந் (கந்)

சரணங்கள்

தந்தையுரைக்காகவே தரணிவலமாகவே
வந்தசுந்த்ரப்பாதா மந்தரமிகும்பிரக்யாதா (கந்)

ஆரும்நிகரில்லாதவா யருள்சிறந்தவல்லவா
நீராவினையனைத்துஞ் சீக்கிரமதாயகற்றும் (கந்)

வெங்கிடதாசன்பதம் வேண்டித்துதித்தேன்நிதம்
சங்கடங்களணுகாது தார்க்கார்க்கதகுமிப்போது (கந்)

ராகம்—ஆனந்தபைரவி—தாளம்—ஆதி.

பல்லவி

கந்தாகடைக்கண் பாரய்யா—கருணை
வைத்துக்கவலையதனைத் தீரய்யா (கந்)

அநுபல்லவி.

செந்தூர்பதியில் வந்தோனே
தேவாதி தேவனே
அந்திவண்ணன்—மகனே ஆறுமுகனே (கந்)

சரணங்கள்.

தேவர்சேனைகாவலா தெய்வானைலோலா
கோபாலன்றங்கைபாலா குமரவேலாந் (க)

நற்கீரர்சிறந்தநேசா ஞானோபதேசா
கற்பகமிகும்பிரகாசா கனவுல்லாசா (கந்)

கங்கையிற்பிறந்தவேதா கமலப்பாதா
வெங்கிடதாசனிங்கீதா மேற்பதந்தாதா (கந்)

இராகம்—தேசிக தோடி—தாளம்—ஏகம்

பல்லவி

வடிவேலனே வருவாயென்முன்னே (வ)

அநுபல்லவி.

துடியானசூரன் சூரபத்மதீரன்
படைதூளிசெய்து நெடுந்திடமெய்த (வ)

சரணங்கள்

தென்பரங்கிரிவாசா தெய்வானை-நேசா
உன்பரமேனனே ஓங்காரரூபனே (வ)

இப்ரபஞ்சமாய்கை யென்னைச்செய்யுஞ்செய்கை
தப்புதற்கு வழிச் சாற்றுமருளாளி (வ)

வெங்கிடபதாசன் வெற்றிசேர்ப்ரகாசன்
சங்கீதப்பணேங்குஞ் சத்தியருள்தங்கும் (வ)

ராகம்—ஆனந்தபைரவி—தாளம்—ரூபகம்

பல்லவி

வருவாய்முருகையனே மயில்நடத்தியென்முன்னே (வரு)

அனுப்பல்லவி

அருமறைகளும் போற்றிடும்பாதா
அமரரிடுக்கமுந் தீர்த்தமேதோர்நீதா
கருணையேயருள் சிறந்திடும்போதா
கன்னிவள்ளிக்குகந்த தோர்நாதா (வரு)

சரணங்கள்

பருவதமோயிந்தத்தேகம் பசும்புல்நுனி
கருவுமைந்துவந்தமோகம் பார் பார்
என்முகங் கூர்கூர்
சீர்மொழிமேறிலங்குமிப் பாருக்கரசனே (வரு)

சமுசாரசாகர சூஸ்த்ரந்தன்னைச்
சற்றுத்துபாராதார்க்கு யதுமிகத்தோஷதாஞ்
சஞ்சீவியென்றுங் கஞ்சமலர்ப்பதம்
தஞ்சமெனநம்பி யஞ்சலிசெய்தேன் (வரு)

பங்கமில்லா திண்புயத்தோனே
வெங்கிடதாசன்பவுசு மேலாயருளீய்ந்தோனே
பாதுகாகா தீதணுகாது
மாதுமலர்மகள் மகிழும்மருகனே (வரு)

ராகம் முகாரி தாளம் நபகம்.

பல்லவி.

காரும்கந்தநாதாக் கமலமலர்ப்பாதா (கா)

அநுபல்லவி.

வாருதிசூழ்புவி சீரணிதென்பறங்குன்றத்தில்
வாழ்குகனே யெனக்காரய்யாவுனைவிட
யிப்பிரபஞ்சத்தி லாதரவார்வேலனே (கா)

சரணங்கள்.

தேனுந்தினைமாவுங் கானக்குரவள்ளி
செங்கையாலுண்டவாகா நாளும்நானுனை
நம்பியுமேனின்னந்தாமதம் நாராயணன்மருகா (கா)

புள்ளிமயிலேறி வுல்லாசமாகவே
பூமிவலம்வந்தவா வுந்தன்பிள்ளைக்கி
விபூதியள்ளியேபூசியே யாண்டிடவாதேவா (கா)

சங்காரர்க்குபதேச மெய்தமறியவே
சாற்றியசற்குருவே யென்றும்வெங்கிடதாசனும்
வேண்டினேனுன்பதம் மிக்கயருள்பெறவே (கா)

ராகம்—தோடி—தாளம்—ரூபகம்.

பல்லவி.

மயிலேறிநடத்திவாவா முருகாமாதவன்மருகா (மயி)

அநுபல்லவி.

ஜெயமாய்தேவர்கள் பதியுமானவாச்
சிறக்கத்தென்பரங் குன்றிலமர்ந்தவா
நயமாயெங்கினு மருளைப்பூண்டவா
நாடியெனைத்தேடி வழிகூடிவிளையாடி (மயி)

சரணங்கள்.

கஞ்சமலர்வாவி கொஞ்சுமுல்லாசா
கார்த்திகைதீபங்கள் நேர்த்தியாகும்வாசா
தஞ்சமென்றோருக்குச் சஞ்சீவியாம்நேசா
ஜலதியிலென்பதம்பெருக நலமிலக பெலந்தருக (மயி)

அப்பன்சொல்லுக்காக அவனிவலம்வந்தாய்
அருணகிரிக்குவுன் சரணமுந்தந்தாய்
வட்புக்கருப்பண சுவாமியைமகிழ்ந்தாய்
வந்தாளுவாயிந்தவேளை யெந்தனையுஞ்சுந்தரமாய் (மயி)

ஓமெனுமட்சர முண்மையில்நின்றோனே
உத்திராட்சப்பணி யாரங்கள்பூண்டோனே
நாமெனுங்கெர்வமடக்குந் திரத்தோனே
நாளும்வெங்கிடதாசன் வாழ்வுதாழாவேலா (மயி)

ராகம்—காம்போதி—தாளம்—ஆதி.

பல்லவி.

ஏனித்தனைமோடி ஷண்முகா
எந்தன்மீதிலுந்தனுக்கு யின்னமுந்தயவில்லாமல் (ஏனி)

அநுபல்லவி.

மானிலத்திலுன்னையன்றி மற்றுமொரு
தெய்வங்களைவணங்கே னெனவறிந்தும்
மவுனமாகஞானமே பெரிதாயெண்ணி
நீயிருந்தாலுந்தகாது நன்மைசெய்அடி
யாருக்குத்தின்மை செய்வதழகோ (ஏனி)

சரணங்கள்.

ஏதுமிவன்விடமாட்டா னென்றுநீயும்பயந்து
எந்தவுலகமதிலிருந்தாலுஞ் சாதுக்களுக்குவரந்
தந்திடவாகந்தா வென்றுச்சாற்றுமிவன்
மதுரபதமேற்று வேனுனைக்குறித்து (ஏனி

ஆதிமூலமென்றழைத்த யானையின்முன்
வந்தவனன்னையுடன்பிறந்த ஹரியுமல்லோநீதி
யறியாதவன்போலச் சாதனை
செய்தாலென்மேல் நேர்த்துயோ
யிதுசமயங் கார்த்திகேயாவுனக்கு (ஏனி)

அண்டமுதலெண்டிசையும் பண்டிதத்தில்
வண்டனென்று அருளுவதாலுனக்கு
மமுதையுண்டோ தொண்டன்
வெங்கிடதாசஞ்சொல்லும்பாவுக்கிரங்கித்துரிதமாய்
வந்துயெந்தன் றுயரைக்களைந்தருள்வாய் (ஏனி)

ராகம்—காப்பி—தாளம்—ரூபகம்.

பல்லவி.

கந்தநாதாயின்னமென்மீது கருணைசெயொணுதா (கந்த)

அநுபல்லவி

எந்தநேரமுமுந்தன்பொற்பதம் வந்தனம்புரிந்தும்

சரணங்கள்.

வையகமெங்கும்மாங்கனிக்காக வலமாய்வந்தவா
மைந்தனுக்குரியவருமைநீக்கி வரமருளுந்தேவா (கந்த)

இப்ரபஞ்சமாய்கை கப்பியிருக்கும்வீடதனை
செப்பமுள்ளமாளிகைசெய்ய திட்டமுறைகுகனே (கந்த)

வெங்கிடதாசன்றன்கிட்ட நின்றுவிளையாடுஞ்சோதி
சங்கடங்களையணுகாது தர்க்கார்நீயேகெதி (கந்த)

ராகம்—தன்யாசீ—தாளம்—ஆதி.

பல்லவி.

ஷண்முகனே ஓம் சரவணபவகுரு
சாமிசடாக்ஷரனே (ஷண்)

அநுபல்லவி.

எண்ணிலாததொரு வண்ணமானதிரு
கண்ணன்மாமருகா விண்ணோர்துதிமுருகா (ஷண்)

சரணங்கள்.

புள்ளிமயில்மீதேறி புகழ்மிகச்சிறந்தவா
வள்ளிகுஞ்சரிக்கு வாய்த்ததோர்கணவா

வெள்ளியங்கிரிபெற்ற விமலனூர்புதல்வா
அள்ளிஅள்ளிக்கொடுத்து யாதரிக்குஞ்சுகவா (ஷண்)

அழைக்க அழைக்கவந்து யருள்தரும்வேலனே
பிழைநூறுசெய்தாலும் பொருப்பதும்நீதானே
மழையதுயில்லாமல் வாடும்பயிர்க்குத்தானே
தழைக்கதழைக்க வரந்தந்திடுங்கந்தனே (ஷண்)

கங்கையிலுதித்தக் கமலப்ரகாசா
எங்கும்நிறைந்தஜோ ரிரத்னக்குமரேசா
சிங்காரமீகிய தென்பரங்கிரிவாசா
வெங்கிடதாசனுக்கு மிக்கவரதநேசா (ஷண்)

ராகம்—இந்துஸ்தான்—காப்பி—தாளம்—ஏகம்.

பல்லவி.

கருணைசெய்ய வருவாய்வருவாய்
முருகாயிது தருணந்தருணம் (கரு)

அநுபல்லவி.

சரவணபவா பிரணவமூல
நிரணயதவகுண கனதர (கரு)

சரணங்கள்.

அண்டர்களாதிதந் தெண்டனைசெய்ததோர்
வண்டயசுரரைக் கண்டித்தவேல்கையா (கரு)

பந்தபாசத்தொல்லை யெந்தனைத்தொடாது
சிந்தனைசெய்தேனே கந்தாவுந்தன்பதம் (கரு)

யெங்கும்பிரகாசந் தங்கிடுமிங்கித
வெங்கிடதாசன்சொற் சங்கீதலோலனே (கரு)

ராகம்—தேசிக—கமாஸ்—தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

சத்திவடிவேலவனே ஷண்முகநாதாகுகனே
உத்தமமிகுஞ்சிமானே வும்பர்சேனைகாவலனே
ஓடிவாஓடிவாஓடிவா ஓடிவாயென்முன் (சத்தி)

சித்ரமயிலேருஞ்சீலா தெய்வகுஞ்சரிலோலா
அத்தன்மகிழும்பாலா அண்டினோர்க்குயனுகூலா
ஆதரிஆதரி ஆதரிஆதரியென்னை (சத்தி)

காட்டில்வேடுவனுகி கன்னிவள்ளிமுனலேகி
தாட்டீகமாய்நின்றயோகி சாற்றவொண்ணுவிவேகி
சஞ்சீவிசஞ்சீவி சஞ்சீவிசஞ்சீவியான (சத்தி)

பந்தபாசத்தொந்தமது பலவிதத்தொழிற்மீது
யெந்தநேரமும்விடாது யிழுக்கும்வினைதொடாது
யின்பந்தாயின்பந்தா யின்பந்தாயின்பந்தா (சத்தி)

கங்கையிலுதித்ததேகா கார்த்திகைக்குகந்தபாலா
வெங்கிடதாசனுக்காக வேண்டினேனுன்பதம்வாகா
மிக்கவேமிக்கவே மிக்கவேமிக்கவேயருள் (சத்தி)

ராகம்—பரசு—தாளம்—ஆதி.

பல்லவி.

வரவுந்தாமதமேதய்யா வள்ளிதெய்
வானையுடன்புள்ளிமயில் மீதிலென்முன் (வ)

அநுபல்லவி.

திருமருமகனேத்தேவர் சேனுதிபனே
அருமறைபோற்றும்பாதனே யடியேன்முன்னே (வ)

சரணங்கள்.

யுகமுகந்தோறுமே வுண்மைபானதெய்வமே
சகலமும்நின்மயமே சற்குணமே (வ)

கலிகாலமொயிலோ கன்னியர்மையலோ
பலவிதத்தொழிலோ பகருவதும்புகலோ (வ)

வெங்கிடதாசன்மேற் பதம்வேண்டும்நேசன்
யெங்கும்நிறைந்தவாசன் யெதும்பிரகாசன் (வ)

ராகம்—மத்யாமதி—தாளம்—ஆதி.

பல்லவி.

மனமேதுதி குணமே மாமறைக
ளேத்தும் வடிவேலனை நிதமே (மன)

அநுபல்லவி.

மானிடஜென்மஞ் சதமென்றுநம்பாதே
வாட்கையைப்பெரிதாக வைத்துமேயலையாதே
மருவிவருவதை யுறமாகவேயெண்ணு
மாய்கைகடாவையும் விலக்கவழிபண்ணு

திரமதாகிய யடியார்களை நண்ணு
ஜெபதபத்துடன் பதமாகவேவுண்ணு (மன)

சரணங்கள்

பொல்லாதபுவிபந்தப் போக்கேசிறிது
புண்ணியஞ்செய்வது ஆர்க்குமே பெரிது
நல்லவிஷயங்களை செய்திடநாடு
ஞானசாஸ்திரம் படித்திடக்கூடு
சொல்லொணுதநோர் வீட்டைத்தேடு
சூதுவாதுகளைத் துலையினிற்போடு (மன)
பொய்சொல்லி வாழ்பவர் பூமியில்வெகுபேர்

புறையற்றதவத்தோரை போற்றிநீயே
மெய்யான தொன்றை விடாமலே சொல்லு
வேடிக்கைவெளிச்சங்க டாவையும்வெல்லு
தெய்வமொன்றுண்டென நிலையினில்நில்லு
செருக்குசெய்யாமலே திருத்தமாய்கல்லு (மன)

வெங்கிடதாசன்வேண்டுஞ் சுப்பிரமணியன்
மேற்பதம்நாளு மடைந்திடும்செண்யன்
கங்கையில்வந்தக் கமலப்பிரகாசன்
காசினியாவிலும் நேசவிசுவாசன்
மங்களமாக வளருமுல்லாசன்
வண்ணமிகுக்கவே வந்ததோர் தாசன் (மன)

காவடிச்சிந்து

என்னடி நான்பெற்ற மங்கையென்ற வர்ண மெட்டு.

ஞானமான பிரகாசா தினவாசா கானநேசா
யென்னுளுஞ்சிறந்த உல்லாசாவுனை
நாடிப்பதம் பாடிநிதம் சூடியிதம் கூடிச்சதம்
நாணுமேவேண்டினேனே வும்பர் சேனைக்கதிபதியோனே

வானமிஞ்சிய யோகா யானைபாகா தானைவாகா
யென்றும்மாசிலாததோர் தேகா நறு
மணமேதகு குணமேமிகு துணையேபுகு தொணியேவெகு
வண்ணம்பொருந்துமெய்யாரா வரம் பெண்ணிலாதருள்வீரா

ஆறுபடை வீடுமேலே மேருபோலே சீருநாலே
அதி ஆனந்தங் கொஞ்சுவதாலேமெய்
அடியாருட திடமேரிட யிடரோடிட அடியாடிட
அன்பதாகியசெய்யா நிதம் நம்பினேன்முருகையா

1713(17)

பந்தபாசமெனுந் தொல்லை யிந்தயெல்லை வந்தமொல்லை
[illegible]யைபற்றுவிடத் தவம்வல்லைநிறை
பரிபூரண வ[illegible] நிரகாரண கிரிவாள்குண
பாக்கிய[illegible] நற் யோக்கியந்தங்கியசீலா

வெற்றிமாமயிலேரும் நாதா சித்தர்போதா முத்தர்வேதா
வெங்கிடதாசன் பணிந்திடும்பாதாசுகம்
வேண்டினேனுனை ஆண்டிடுயெனைநீண்டதோர்வினைநீண்டிடாதுனை
மேல்வீடுதந்தருள்வாயே நீல கண்டமன்கிழுநற்சேயே

அம்சகிரத மதுர மதுர யென்ற வர்ண யெட்டு.

ராகம்—இந்துஸ்தான்—காப்பி—தாளம்—ஏகம்

கண்ணிகள்

கஞ்சமலர்மகள் கொஞ்சிவிளையாடுங்
கண்டிமாநகராளுங் கதிரேசாநாளுஞ்
சதுராயெனையாளுங் காசினிபோற்றுஞ்சீலா
நேசமேவளருமேலா கங்கைமகிழ
வந்துதித்த பாலா (கஞ்ச)

தஞ்சமென்றுந்தன் பொன்னடிதனைச்சாற்று
மன்பற்குத்தானே சஞ்சீவியானதேனே
மஞ்ஞையேறுங்கோனே சடாக்ஷரமந்த்ரவாசா
கடாக்ஷமேமிகும் பிரகாசா
சந்ததம்வளருங் குமரேசா (கஞ்ச)

சிஞ்களவர்நாடுதோறுஞ் செல்வமேநிறைந்தவா
சிங்காரம்புரிந்தவா சங்கமீதில்வந்தவா
திங்களையணிதோன்மைந்தா திகிரியெலாமமர்ந்தாய்
செட்டிமகனுகவுமே வந்தாய் (கஞ்ச)

மட்டிலாதபொற்பணிகள் மார்பிலங்குஞ்சுந்தார
வயணமானமந்திரா ஜெயமேதங்குந்தந்திரா
வானோர் சேனைக்கதிபா
ஞானப்பிரகாசரூபா மாதவன்மருகனுனைதேவா (கஞ்ச)

வேல்வேலெனகாவடி தோள்மீதில்வைத்து
ஆட்டுவாய் மிக்கபிணியையோட்டுவாய்
தக்கபுகழைக்கூட்டுவாய் வெங்கிடதாசன்நேயா
மங்களமருளுந் தூயா
மெய்யாக விளங்குமுமைசேயா (கஞ்ச)

பதங்கள்முற்று

சாத்துக்கவிகள்.

நாவினிப்பட்டி
கிராம முனிசீபும் ஷை கிராமம் வேதாந்த மடாலய
மானேஜருமான மகா-ா-ா-ஸ்ரீ
ரா, ம, அரசப்பபிள்ளை அவர்கள்
இயற்றியது.

விருத்தம்

சச்சிதா னந்தமதைத் தெரிய வொட்டாத்
தனிமாயை வசத்தாகி தவிப்புற்றோர்கட்
கச்சிதா காசநிலை தோன் றற்குக்
குமரகுரு யருளை வேண்டி
உச்சிதமாய் பதிகமுடன் பதங்களும்
வெங்கிட தாசனுரைத்தான் மேலாய்
மெச்சியே வும்பர்களு மானந்த
வெள்ள மதில் மேவினரே.

ஷை நாவினிப்பட்டி வேதாந்த மடாலய சங்கத்திய
சு. ப. மாணிக்கம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

கவி.

பிறப்பெனுங் கடல்கடந்து பெர்மமாம்முத்திதன்னை
விருப்பமாய் ஷண்முகத்தின் மேற்பதம் வெங்கிடதாசன்
உருக்கமாயுரைக்கக்கண்ட வுயர்த்தியாஞ்செய்ய கும்ப
பொருப்பில்வாழ்முனியானந்தப் புதுமைகொண்டாடினனே

மேலூர் நா. க. வு. கல்விக்களஞ்சியப் புலவர் அவர்கள் குமாரர்
மகா-ா-ா-ஸ்ரீ உமர்ப்புலவர் அவர்கள் இயற்றியது.

கவி.

என்னாளும்வருகின்ற ஜென்மவினைமாறுதயேக்கத்தாலே
முன்னாளில்செய்தவினை முற்றுதலைமாற்றுதற்கு முருகவேள்மேல்
இன்னாளில்பதிகபதம் வெங்கிடதாசனுமே யியம்பக்கேட்ட
தன்னாவியிணைபணமுடிச் சேடன்றளவரைக்குள் சார்ந்தான்றானே.

சாத்துக்கவிகள் முற்றிற்று.

ஆனந்தவருஷ பங்குனிமீ கடுஉ